தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்
நிர்வாகக் கிளை

அனுப்புனர் பெறுநர்

பொறிஞர்.சை.சையத் லியாகத்,பி.இ., அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு
144, அண்ணாசாலை,
சென்னை-600 002.

<u>கடித.எண்.028610/ஜி9/ஜி91/2011-2,நாள் 01.11.2011</u>

அய்யா,

பொருள்: கருணை அடிப்படையில் வாரிசு வேலை - மூன்று ஆண்டிற்குள் 18 வயது பூர்த்தியாகாமல் இதர நிபந்தனைகளுடன் வாரிசு வேலை கோருதல் - 23.08.2005க்கு முன் நிராகரித்தல் விண்ணப்பங்கள் - தொடர்பாக.

பார்வை: நிலை முழு வாரியம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.17 (நிர்வாகக் கிளை நாள் 01.11.2011).

www.tnebes.org

---

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பார்வையில் கண்ட ஆணையின்படி பணியிலிருந்து மரணமடைந்த வாரியப் பணியாளரின் வாரியதாரர்களில் யாரேனும் ஒருவர் விண்ணப்பித்து அவ்விண்ணப்பம் மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 18வயது நிறைவடையாத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டுயிருப்பின் அவ்விண்ணப்பம் / கருத்துருக்கள் மீண்டும் களவிசாரணை செய்து களவிசாரணை அதிகாரி கையொப்பம் மற்றும் தங்களின் பரிந்துரையின் பேரில் மீண்டும் பரிசீலனை செய்ய ஏதுவாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

2. இக்கடிதம் மற்றும் நிலை முழு வாரிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.17 (நிர்வாகக் கிளை) நாள் 01.11.2011 பெற்றமைக்கு உடன் ஒப்புதல் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: மேலே கூறியபடி (1தாள்).

சை.சையத் லியாகத்
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
சுருக்கம்

<u>கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் - விண்ணப்பங்கள் பெறுவது மற்றும் வயது நிர்ணயித்தல் - தெளிவுரைகள் தொடர்பான - அரசு கடிதத்தினை நடைமுறை படுத்துதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.</u>

நிர்வாகக் கிளை

நிலை முழுவாரியம் த.மி.உ.ம.ப.க. நாள் 01.11.2011
செயல்முறை ஆணை எண்.17

திருவள்ளுவர் ஆண்டு 2042
15-ஐப்பசி / கர வருடம்.

<u>படிக்கப்பட்டது</u>

1. அரசு கடித நிலை எண்36/க்யூ/2010-2/நாள் 4.5.2010.
2. த.மி.உ.ம.ப.க. கூட்ட நாள் 18.10.2011, வரிசை எண்.11.
3. வாரிய ஆணை (முழுவாரியம்) எண்.46 (நி.கி) நாள். 13.10.95.

www.tnebes.org

செயல்முறைகள்:

பார்வை (1)ல் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் தொடர்பாக தெளிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்வை (2)ல் நடைபெற்ற தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கூட்டத்தின்படி அரசு கடிதத்தினை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய நிறுவனம் நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

2. அதன் பேரில் பணியிடை மரணமடைந்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய நிறுவனம் ஊழியரின் வாரிசு தாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட கீழ்காணும் தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

அ) 23.08.2005க்கு முன்னர், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மூன்று (3) ஆண்டு காலக்கெடுவுக்குள் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 18 வயதினை நிறைவு பெறாமல் இருந்தாலும், கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கான ஏனைய பிற தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில் தகுதியானதாகக் கருதப்பட வேண்டும்.

ஆ) 23.08.2005 முதல் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான வயது 18 என நிர்ணயிக்கப்பட்டதால் 23.08.2005க்கு பின்னர் 18 வயது நிரம்பிய வாரிசுதாரர் மட்டுமே கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியானவர் எனக் கருதப்பட வேண்டும்.

இ) பார்வை (3)ன் படி கருணை அடிப்படையில் பணி நியமனங்களுக்கு தமிழ் நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ் நாடு மின்வாரிய நிறுவனம் ஊழியர்கள் இறந்த மூன்றாண்டிற்குள் விண்ணப்பதாரர் விண்ணப்பம் அளிக்கும் நாளினையே கணக்கில் கொண்டு வயது மற்றும் கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப்படவேண்டும்.

ஈ) மேலே பத்தி 2 (இரண்டில்) உள்ள தெளிவுரை அரசு கடிதம் வெளியிடப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய நிறுவனம் நடைமுறைப்படுத்த அமுலுக்கு வருகிறது.

3. மேற்கண்ட அரசு உத்தரவினை தமிழ் நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ் நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ் நாடு மின்வாரிய நிறுவனம் 04.06.2010 முதல் நடைமுறைப்படுத்த இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

www.tnebes.org

//தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஆணைப்படி//

சை.சையத் லியாகத்
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு.